1995 ஏப்ரல் 10]

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

நாகப்பட்டினம் கடல் பகுதியில் 19 மீனவர்கள் காணாமல் போனது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6-ஆம் தேதி, நாகப்பட்டினத்தில் 19 மீனவர்கள் காணாமல் போனது குறித்து தங்களிடம் ஒத்திவைப்பு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அது பற்றி முழு விவரம் வந்தவுடன் நான் எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுத்தகவல் பெற்று இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். நாகப்பட்டினம் அருகே மீனவர்கள் பலர் காணாமல் போனது பற்றிய பிரச்சினையை இந்த அவையில் எழுப்ப சென்ற வெள்ளிக்கிழமை என்னுடைய அனுமதியைக் கேட்டு இருந்தீர்கள். நானும் முழுவிவரம் கிடைத்தவுடன் அனுமதிக்கிறேன் என்று சொல்லியிருந்தேன். சிறப்புக் கவன ஈர்ப்பாக அதை எழுப்பலாம். அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரை அடுத்து அனுமதிக்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தாமரைக்கனி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். ஆக 3 பேரும் கொடுத்திருக்கிறீர்கள். திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்தில் 3-4-1995 விடியற்காலையில் அக்கரைப் பேட்டையிலிருந்து கிளம்பி தென் கிழக்கே சென்று கோடியக்கரை ஒளிவிளக்குக்கு தென் கிழக்கே 5½ பாகத்தில் வலை விரித்து மீன் பிடித்துக்கொண்டிருந்தனர்; செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணி அளவில் அந்தப் பகுதிக்கு ஒரு பிளாஸ்டிக் படகு வந்தது. அந்த படகில் அடையாளம் தெரியாத மனிதர்கள், ஆயுதங்களோடு அந்தப் பகுதிக்கு வந்து தொழில் செய்து கொண்டிருந்த 4 படகுகளில் இருந்தவர்களை கட்டி இழுத்துச் சென்று உள்ளனர். அவர்களை விரைவாக கண்டுபிடிப்பதற்காக இது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[*1995 ஏப்ரல் 10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், திரு. ஆர். கோடிமாரி.

திரு. ஆர். கோடிமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3-4-1995 அன்று நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து 4 விசைப் படகுகள் மீன் பிடிக்கச் சென்றன. இதுநாள்வரை கரைக்கு அவர்கள் திரும்பாதது குறித்து மாண்புமிகு மீனளத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்பெசல் மென்சனில் உங்களுடைய பெயரைச் சேர்க்கச் சொல்லியிருக்கிறேன், உட்காருங்கள், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மீன் பிடித்துறைமுகத்திலிருந்து அக்கரைப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் 50 பேர் விசைப் படகில் கோடியக்கரை நார்த் ஈஸ்டு அதாவது வட கிழக்குக்கு அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்களால் படகுடன் மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாக தகவல் கிடைத்தது. ஏறக்குறைய 4 விசைப்படகுகளுடன் 19 மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாக அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்தது. இந்தத் தகவல் கிடைத்தவுடன் போர்க்கால அடிப்படையில் நம்முடைய ஆற்றல்மிக்க இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) உடனடியாக விரைந்து என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவ்வளவு நடவடிக்கைகளையும் உடனடியாகப் போர்க்கால அடிப்படையிலே எடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அவருடைய உத்தரவை ஏற்று கடலோர காவல் படைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் கடலிலே அந்த வழியாகச் செல்லுகின்ற கப்பல்களுக்கெல்லாம் தகவல் தரப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அவர்களுடைய வேர்அபௌட்ஸ், அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்று தெரியாத காரணத்தினால் ஹெலிகாப்டர் மூலமாகத் தேடுவதற்குக்கூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கடைசியாக, நம்முடைய

1995 ஏப்ரல் 10] [திரு. டி. ஜெயகுமார்]

பொதுத் துறையினுடைய செயலர் அவர்களும், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைச் செயலர் அவர்களும், ஆணையர் அவர்களும் இலங்கையிலுள்ள இந்தியன் ஹை-கமிஷனர் திரு. நரேஷ்வர் தயாள் அவர்களோடு தொடர்பு கொண்டதிலே-- அதுமட்டுமல்லாமல் இந்திய ஹை-கமிஷனர் அவர்கள் இலங்கையிலுள்ள திரு. ரமேஷ், செகண்ட் செக்ரட்டரி அவர்களோடு தொடர்பு கொண்டதிலே-- தற்போது இலங்கை கடற்படையினருடைய பாதுகாப்பிலே, அந்த 19 மீனவர்களும் பத்திரமாக இருக்கின்றார்கள் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. இன்னும் 2 நாட்களிலே அவர்கள் தாயகம் திரும்பி விடுவார்கள் என்ற செய்தியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை

உறுப்பினர் திரு. ச. அழகிரி 29-3-1995 அன்று அவையில் தெரிவித்த ஒரு கருத்து குறித்து

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்?

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தேசப் பிதா மகாத்மா காந்தி அவர்களைப் பற்றியும், ஜவகர்லால் நேரு அவர்களைப் பற்றியும் இங்கே அவதூறாக காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் பேசினார்கள். மகாத்மா காந்தி அவர்களும், ஜவகர்லால் நேரு அவர்களும் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் சொந்தமானவர்கள் அல்ல. தேசப் பிதா இந்தியாவிற்கே சொந்தமானவர். (குறுக்கீடு) அந்த விஷயம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் அழகிரி பேசியதற்கு இதுவரையில் மன்னிப்பு கேட்கவில்லை. அவர் வருத்தமும் தெரிவிக்கவில்லை. அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும்; மன்னிப்பு கேட்க வேண்டுமென்று நாங்கள் பலமுறை கோரியும்கூட அந்த உறுப்பினர் அதைச் செய்யாத காரணத்தினால்... (குறுக்கீடு)

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS